# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
www.supeedsam.com

திங்கட்கிழமை 09.09.2024 supeedsam.com supeedsam@gmail.com


# தமிழரசு கட்சிக்குள் அரியநேத்திரனுக்கு அதிகரிக்கும் செல்வாக்கு

## சிங்கள வேட்பாளர்களை ஆதரிப்பதில் முரண்பாடு



இன்னும் இரண்டு வாரங்களில் (21) நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலின் போது, யாருக்கு ஆதரவளிப்பது என்பது தொடர்பில், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி மேற்கொண்டுள்ள தீர்மானத்தில் குழப்பம் நீடிக்கிறது.

வடக்கு கிழக்கு சார்பில் தமிழ் பொது வேட்பாளர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுகின்றார்.

02 ஆம் பக்கத்தில்...

# அனுரவின் இனவாத கருத்தை மறுத்த சுமந்திரன்

## இணைந்து செயற்படவும் தயார்



தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திசாநாயக்க யாழ்ப்பாணத்தில் இனவாதமாக கருத்து தெரிவிக்கவில்லையென தாம் நம்புவதாக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த அவர்,

அனுரகுமார திசாநாயக்க யாழ்ப்பாணத்தில் உரையாற்றிய போது மாற்றம் தொடர்பிலும், தெற்கிலே மக்கள் மாற்றமொன்றை ஏற்படுத்தும் வேளையில் வடக்கு மக்கள் அதற்கு ஆதரவாக மற்றும் பங்காளிகளாக இல்லாமல் இருக்கிறார்கள் என்றொரு கருத்தை கூறியிருக்கிறார்.

இந்த கருத்து தொடர்பில் தற்போது விமர்சனங்கள் எழுந்துள்ளன. கோட்டாபய ராஜபக்ச

02 ஆம் பக்கத்தில்...

# ஆரம்பமானது மனித உரிமைகள் பேரவையின் 57 ஆவது கூட்டத் தொடர்!

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 57ஆவது கூட்டத் தொடர் சற்று முன்னர் ஜெனிவாவில் ஆரம்பமாகியுள்ள நிலையில், இன்று இலங்கை தொடர்பாக ஏற்கனவே வெளியிடப்பட்ட அறிக்கை மீதான விவாதம் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இலங்கையில் நல்லிணக்கம் பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல் என்ற தலைப்பிலான, 51 இன் கீழ் ஒன்று தீர்மானத்தில் தற்போது வரையிலான உள்நாட்டு மனித உரிமைகள் நிலைமைகள் தொடர்பாக விவாதிக்கப்படுகின்றது.

இலங்கையின் மனித உரிமைகள் மற்றும்

02 ஆம் பக்கத்தில்...



# மாவை சேனாதிராஜா - ஜனாதிபதி ரணில் திடீர் சந்திப்பு!







ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று இடம் பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் தெல்லிப்பளையில் உள்ள மாவை சேனாதிராஜாவின் இல்லத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க , இரண்டு தேர்தல் பிரசாங்களில் பங்கேற்பதாக யாழ்ப்பாணம் சென்றிருந்த வேளையில் மாவை சேனாதிராஜாவின் தனிப்பட்ட அழைப்பின் பிரகாரம் ஜனாதிபதி, அவரின் இல்லத்திற்கு சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

02 ஆம் பக்கத்தில்...

# வீழ்ச்சியடையும் ரணிலின் திட்டங்கள்: 30 பேரணிகள் முழுமையாக இரத்து

ஜனாதிபதி தேர்தலுக்காக 90 பொதுக் கூட்டங்களை நடத்துவதற்கு ரணில் விக்கிரமசிங்கவின் பிரச்சாரப் பிரிவு திட்டமிட்டிருந்த போதிலும், அத்திட்டம் முற்றாக வீழ்ச்சியடைந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

அதன்படி, தற்போது 30 பேரணிகள் முழுமையாக இரத்து செய்யப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

பிரச்சாரம் தொடங்கிய நாள் முதல் அவர் நடத்திய பேரணிகளின் எண்ணிக்கையும், மீதமுள்ள

02 ஆம் பக்கத்தில்...

# ஜனாதிபதி தேர்தல்: 3 இலட்சத்துக்கும் அதிகமானோர் வாக்களிக்க முடியாத நிலை!

வெளிநாட்டு பணியாளர்கள் மற்றும் கைதிகளின் வாக்களிப்புக்கு தேவையான சட்டம் வழங்கப்படாமையால் இந்த ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் 3 இலட்சத்திற்கும் அதிகமான வாக்குகளை செலுத்த முடியாத நிலை உருவாகியுள்ளதாக தேர்தல் கண்காணிப்பாளர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இதற்கு சட்டமன்ற அமைப்பான நாடாளுமன்றமே நேரடியாகப் பொறுப்பேற்க வேண்டும் என்றும், இது நாட்டின் கணிசமான சதவீத மக்களின் அடிப்படை உரிமைகளை மீறுவதாகவும் தேர்தல் கண்காணிப்பாளர்கள் கூறுகின்றனர்.

வெளிநாட்டு தொழிலாளர்கள் மற்றும் கைதிகளின் வாக்களிக்கும்

02 ஆம் பக்கத்தில்...

# கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயம் நிறைவேறும்

(பாறுக் ஷிஹான்)

கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயம் தொடர்பாக ஜனாதிபதியிடம் பேசியிருந்தேன் .எமக்கு எல்லை நிர்ணயம் தேவையில்லை. உடனடியாக கணக்காளர் நியமிக்கப்பட வேண்டும் என்று கேட்டுள்ளேன் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பேராசிரியர் முருகேசு ராஜேஸ்வரன் குறிப்பிட்டார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் அம்பாறை மாவட்டம் கல்முனை பகுதியில் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் இணைப்பு அலுவலகம் ஒன்றினை நற்பிட்டிமுனையில் திறந்து வைக்கப்பட்ட பின்னர் விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு தெரிவித்தார்

மேலும் தனது கருத்தில் தெரிவித்ததாவது;

அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் கடந்த பல்லாண்டு காலமாக எதிர்நோக்கி வரும் பிரச்சனைகள் ஜனாதிபதி ரணில் காலத்தில் தீர்த்து வைக்கப்படும்.

எமது மக்களை ஏமாற்றிக்கொண்டு ஒரு சில அரசியல்வாதிகள் தங்களுடைய சுயலாபங்களை அடைந்தவையே மிச்சம். எல்லா மாவட்டங்களிலும் ஒப்பிடும் பொழுது அம்பாறை மாவட்ட தமிழ்ப் பிரதேசங்கள் அனைத்தும் பின் தங்கியே காணப்படுகின்றது.எதிர்காலத்தில் அம்பாறை மாவட்ட தமிழ் மக்களை அங்கு வசிக்கின்ற மக்களே ஆள வேண்டும் அவர்களுக்கான சகல விதமான முடிவுகளையும் அவர்களே எடுக்க வேண்டும் . அவ்வாறு இருந்தால் மாத்திரமே இளைஞர்களின் தொழில் வாய்ப்புகளும் சரி அபிவிருத்தியிலும் சரி கொள்கையிலும் சரி எந்தவிதமான குறுக்கீடுகளும் இல்லாமல் சிறந்த முடிவுகள் எட்டப்படும். ஆகவே இவற்றைக் கருத்தில் கொண்டு நமது மக்களுக்கான வாய்ப்பாக நடைபெறுகின்ற ஜனாதிபதி தேர்தலை பயன்படுத்துவதை எதிர்பார்க்கின்றேன்.



இது தவிர ஜனாதிபதியிடம் கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயம் தொடர்பாக பேசியிருந்தேன் .எமக்கு எல்லை நிர்ணயம் தேவையில்லை. உடனடியாக கணக்காளர் நியமிக்கப்படவேண்டும்என்று கேட்டுள்ளேன்.நான் மாகாண சபை உறுப்பினராக இருந்த போது நாவிதன் வெளி சம்மாந்துறை கல்முனை வலய தமிழ் பாடசாலைகளை உள்ளடக்கிய கல்முனை வடக்கு கல்வி வலயம் உருவாக வேண்டியதன் அவசியம் கருதி பல முன்னெடுப்புக்களை செய்திருந்தேன். அதனை நிவர்த்தி செய்து தர வேண்டும் எனும் கோரிக்கையையும் முன்வைத்தேன். பட்டதாரிகளுக்கு நேரடியாக தொழில் வழங்க வேண்டும்.அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில், பொத்துவில், சம்மாந்துறை, நாவிதன்வெளி , காரைதீவு, பிரதேச தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சனைகள் தொடர்பாகவும் விபரித்திருந்தேன்.செப்டம்பர் 21 ஆம் திகதி நிச்சயமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் ஜனாதிபதியாக தெரிவாவார்.அதுவும் வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் அதிகப் படியான வாக்குகளால் அமோக வெற்றி ஈட்டுவார் என்றார்.

மேலும் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் மஞ்சுள பெர்ணான்டோ காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் த.மோகனதாஸ் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

# தினமும் ஒரு நெல்லிக்காய் சாப்பிடுவதால் கிடைக்கும் நன்மைகள்

நெல்லிக்காயில் வைட்டமின் சி, கால்சியம், இரும்பு, பாஸ்பரஸ், நார்ச்சத்து என பல சத்துக்கள் நிறைந்துள்ளது.

1.நெல்லிக்காயானது பருவகால இருமல் மற்றும் சளிக்கு எதிராகவும் போராட உதவுகிறது

2.வைட்டமின் சி சத்துக்களை அதிகமாக கொண்ட நெல்லிக்காய் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கசெய்து , நம்மை நோய்களிலிருந்து பாதுகாக்கின்றது.

3.இரத்தத்தில் உள்ள சரக்கரை அளவை கட்டுப்படுத்தி நீரிழிவு நோயை கட்டுப்படுத்த உதவுகிறது

4.மூளை வளர்ச்சிக்கு உதவுவதுடன் ஞாபக சக்தியையும் அதிகரிக்க செய்கின்றது

5.கண்பார்வை திறனை மேம்படுத்த உதவுகிறது

6அல்சர் மலச்சிக்கல் போன்ற பிரச்சனைகளை தீர்க்கின்றது

7.சரும பிரச்சினைகளை தீர்த்து முகத்தை பொலிவடைய செய்கின்றது

8.தலைமுடி உதிர்வை தடுத்து முடி வளர்ச்சிக்கு உதவுகிறது

9.ரத்தத்தை சுத்திகரிப்பு செய்து உடலில் உள்ள நச்சுக்களை வெளியேற்றுகின்றது.

10.உடலில் ஏற்படும் வீக்கத்தைக் குறைக்க உதவுகிறது

திவாரகா ராம்



## ஜனாதிபதி தேர்தல்: 3 இலட்சத்துக்கும்

உரிமையை உறுதிப்படுத்துவதற்கு தேவையான சட்டத்தில் நாடாளுமன்றமோ அல்லது அதிகாரிகளோ அக்கறை காட்டவில்லை என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க இது தொடர்பான விசாரணையின் போது தெரிவித்தார்.

கைதிகள் மற்றும் வெளிநாடுகளில் வாழும் இலங்கைப் பிரஜைகள் தேர்தல் தினத்தில் வாக்களிக்கும் உரிமையை உறுதிப்படுத்துவதற்கு தேவையான சட்ட சீர்திருத்தங்களுக்கு தொடர்ச்சியான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் இலங்கை விடயத்தில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை என ரத்நாயக்க தெரிவித்தார்.

அதன்படி இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் தற்போதுள்ள சட்ட கட்டமைப்பிற்குள் நடைபெறும் எனவும் இது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் எந்த நடவடிக்கையும் இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## வீழ்ச்சியடையும் ரணிலின் திட்டங்கள்:

இலக்குகளை அடுத்த 10 நாட்களில் நிறைவு செய்ய முடியாத நிலையும் உள்ளது என்பது தெரியவந்துள்ளது.

இதேவேளை, கொழும்பில் குறைந்தது ஆறு தேர்தல் பிரச்சார அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரச்சார அலுவலகத்தில் பாரியளவில் பணம் திருடப்பட்டுள்ளதாகவும் கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அந்த அலுவலகத்தின் தலைவர்கள், எதிர்வரும் பொதுத்தேர்தலில் தமது சார்பாக பயன்படுத்துவதற்காக ஏற்கனவே பெருந்தொகையான பணத்தை சேகரித்து வைத்துள்ளதாக தெரியவந்துள்ளது.

## மாவை சேனாதிராஜா - ஜனாதிபதி ரணில்

ஜனாதிபதி தேர்தலின் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பில் இந்த சந்திப்பின் போது விசேடமாக கலந்துரையாடப்பட்டுள்ளது. இதேவேளை, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வெற்றி பெற்று, வடமாகாண அபிவிருத்தியை உறுதிப்படுத்துவார் என நம்புவதாக, இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதியுடனான சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

## அனுரவின் இனவாத கருத்தை மறுத்த சுமந்திரன்

பதவியேற்ற போதும் இவ்வாறானதொரு கருத்தை கூறியிருந்தார்.

அதாவது வடக்கு மக்கள் பங்குதாரர்களாக தன்னோடு இருந்திருக்கவில்லையென கவலைப்பட்டார். ஆனால் அவரை வெற்றிப் பெறச் செய்த மக்களே விரட்டியடித்தார்கள். அப்பொழுது தெரிந்திருக்கும் வடக்கு மக்களுடைய பார்வை சரியானதென்று.

தோழர் அனுரகுமார இந்த வார்த்தைகளை இனவாத உணர்வை வெளிப்படுத்தும் நோக்கில் கூறியதாக நான் நினைக்கவில்லை. எனக்கும் அவரை நன்றாக தெரியும். அவர் அப்படிப்பட்ட ஒருவர் அல்ல.

உண்மையில், இந்த நாட்டில் இனவாதத்தை ஒழிப்பதில் அவர் மிகுந்த அக்கறை கொண்டுள்ளார். எனவே, இந்த விடயத்தில் எங்களுக்கு வேறுபட்ட உணர்வுகள் இல்லை என்றார். அதேவேளை, எதிர்வரும் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவிற்கு தனது கட்சி ஆதரவளிப்பதை மீண்டும் உறுதிப்படுத்திய சுமந்திரன் அனுரகுமார வெற்றி பெற்றாலும் தோல்வியுற்றாலும் அவர் ஏற்படுத்த விரும்பும் மாற்றங்களுக்காக அவருடன் இணைந்து செயற்பட தயார் என்றும் கூறினார்.

## ஆரம்பமானது மனித உரிமைகள் பேரவையின்

மனிதாபிமான நிலைமைகள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் எழுத்து மூலமாக விரிவான அறிக்கை ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ள நிலையில் அதனை அடிப்படையாகக் கொண்டு முதல் நாளில் விவாதம் நடைபெறவுள்ளது.

இந்த விவாதத்துக்குப் பின்னர் இலங்கையின் மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான நிலைமைகள் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்கு இணையான நிகழ்வொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், மனித உரிமைகள் பேரவையில் இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பிலான தீர்மானத்தினை நிறைவேற்றுவதற்கான பிரேரணையை முன்னகர்த்த வேண்டாம் என இலங்கை அரசாங்கம் கோரியுள்ளது.

இதேவேளை ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் கலந்து கொள்வதற்காக வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினரின் சங்க பிரதிநிதிகள் இன்றையதினம் ஜெனீவாவிற்கு பயணமாகியுள்ளது.

வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினரின் சங்கச் செயலாளர் திருமதி லீலாதேவி ஆனந்த நடராஜா தலைமையில் குறித்த குழுவினர் ஜெனிவாவிற்கு சென்றுள்ளனர்.

மேலும் வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்க உபசெயலாளர் சபிதா ரத்தீஸ்வரன் மற்றும் வவுனியா மாவட்டத் தலைவி சறோஜா சண்முகம்பிள்ளை ஆகியோர் ஜெனீவாவுக்கு பயணமாகியுள்ளனர்.

அங்கு இவர்கள் முக்கிய ஆவணங்களை சமர்ப்பிப்பதுடன் பல கலந்துரையாடல்களை மேற்கொள்ளவுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## தமிழரசு கட்சிக்குள் அரியநேத்திரனுக்கு

எனினும், இலங்கை தமிழரசு கட்சி ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவிற்கு ஆரவு வழங்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

வவுனியாவில் அண்மையில் இடம்பெற்ற கட்சி மத்திய குழு கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக இலங்கை தமிழரசு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

எனினும், கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா இந்த தீர்மானத்திற்கு தனது அதிருப்தியை வெளிப்படுத்தும் அறிக்கையை வெளியிட்டதுடன், இது கட்சியின் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை பிரதிநிதித்துவப்படுத்தவில்லை என்று குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பில் ஆலோசிப்பதற்காக கட்சிக்குள் இவ்வாறானதொரு சந்திப்பு இடம்பெறுவது தொடர்பில் தனக்கு தெரியாது எனவும் மாவை சேனாதிராஜா ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாவை சேனாதிராஜாவை யாழ்ப்பாணத்தில் சந்தித்துப் பேசியுள்ளார்.

இந்நிலையில், இலங்கை தமிழரசு கட்சி யாரை ஆதரிக்கும் என்று கூறுவது கடினம் என அந்த கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றிடம் தெரிவித்துள்ளார். ஒரு கட்சி என்ற வகையில், சஜித்துக்கு (பிரேமதாச) ஆதரவளிக்க முடிவு செய்யப்பட்டது. முக்கிய உறுப்பினர்கள் பலர் இல்லாத நிலையில் மத்தியக் குழு கூட்டம் நடைபெற்றது.

கட்சி யாருக்கு ஆதரவளிப்பது என்பதை மத்திய குழு முடிவு செய்வதற்கு முன்னர், திருகோணமலை, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்ட உறுப்பினர்கள் பொதுத் தமிழ் வேட்பாளருக்கு ஆதரவளிக்க விரும்பினர்.

எவ்வாறாயினும், எந்த வேட்பாளரை முன்னிறுத்தலாம் என்பதைப் பொறுத்து இப்போது அனைவரும் சிறந்த தீர்வைக் கருத்தில் கொண்டுள்ளனர், எனவே மக்கள் யாருக்கு ஆதரவை வழங்குவார்கள் என்று சொல்வது கடினம். இதனை தேர்தல் நெருங்கும் போது தெரிந்து கொள்வோம் என்றார்.

தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவளித்து வாக்களிக்க வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள பல மாவட்டங்களைச் சேர்ந்த இலங்கை தமிழரசு கட்சியின் உறுப்பினர்கள் முடிவு செய்துள்ளதாக அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிரசு கட்சியின் மற்றைய உறுப்பினர்கள் அரியநேத்திரனை ஆதரிக்கின்றனர். திருகோணமலை, முல்லைத்தீவு மற்றும் பல மாவட்ட உறுப்பினர்கள் அரியநேத்திரனுக்கு வாக்களிக்க தீர்மானித்துள்ளனர் என்று ஸ்ரீதரன் தெரிவித்துள்ளார்.

கட்சி மத்திய குழுவின் தீர்மானம் குறித்து கேட்ட போது, அவர்களுக்கு என்ன வேண்டும் என்று எனக்குத் தெரியவில்லை. நான் கவலைப்படவில்லை.' எனவும் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எந்த வேட்பாளருக்கு ஆதரவளிப்பது என்பது போட்டியாளர்களின் விஞ்ஞாபனங்களை மீளாய்வு செய்த பின்னரே தீர்மானிக்கப்படும் என இலங்கை தமிழரசு கட்சி கடந்த மாதம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# திருமலை மீனவர் தொழிற்சங்கங்களின் சம்மேளனம் தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவு!



(அ.அச்சுதன்)

திருகோணமலை மீனவர் தொழிற்சங்கங்களின் சம்மேளனம் சனிக்கிழமை (07) தமிழ் பொது வேட்பாளர் பா. அரியநேந்திரனுக்கான ஆதரவை வழங்கினர்.

அரசியல் ஆய்வாளரும் தமிழ் தேசியப் பொதுக் கட்டமைப்பின் நிறைவேற்றுக் குழு உறுப்பினருமான யதீந்திரா இந் நிகழ்வில் கலந்து சிறப்பித்தார்.

# தமிழர் சமூக ஜனநாயக கட்சி ஜனாதிபதி தேர்தலில் சஜித் பிரேமதாசாவை ஆதரிப்பதேன முடிவு..!

(அ . அச்சுதன்)

தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் மத்திய குழுவினால் ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக கட்சியின் நிலைப்பாடு தொடர்பில் ஆராய்ந்து முடிவு எடுப்பதெற்கென நியமிக்கப்பட்ட 10 பேர் கொண்ட குழுவினர் கூடி நீண்ட கலந்துரையாடலின் பின்னர் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி வேட்பாளர் சஜித் பிரேமதாசாவை ஆதரிப்பதென முடிவெடுக்கப்பட்டுள்ளது என தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் பொது செயலாளர் வை. விக்கினேஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு கிழக்கில் செயற்படும் தமிழ் முஸ்லிம் கட்சிகளின் நிலைப்பாடுகளும் மலையக மக்களின் அரசியல் நிலைப்பாடுகளும் கருத்தில் கொள்ளப்பட்டது என தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு இரு விருதுகள்



(வாஸ் கூஞ்ஞ)

நோயாளிகள் பாதுகாப்பு சம்பந்தமான செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்திய வைத்தியசாலைகளுக்கிடையில் தேசிய ரீதியில் இடம்பெற்ற போட்டியில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு இரு சிறப்பு விருதுகள் கிடைத்துள்ளன.

உலக சுகாதார நிறுவனத்தினால் வருடந்தோறும் அனுஷ்டிக்கப்படும் சர்வதேச நோயாளர் பாதுகாப்புத் தினத்தை முன்னிட்டு சுகாதார அமைச்சின் சுகாதாரத் தரம் மற்றும் பாதுகாப்பு பணியகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய நிகழ்வடனது சனிக்கிழமை (07.09) கொழும்பு மரினோ பீச் ஹொட்டலில் நடைபெற்றது.

நோயாளிகள் பாதுகாப்பு சம்பந்தமான செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்திய வைத்தியசாலைகளுக்கிடையில் இடம்பெற்ற போட்டியில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு இரண்டு சிறப்பு விருதுகள் இந் நிகழ்வில் கிடைக்கப் பெற்றுள்ளன.

அகில இலங்கை ரீதியில் இருநூற்றுக்கும் மேற்பட்ட மத்திய மற்றும் மாகாண சுகாதார நிறுவனங்களுக்குள் இடம்பெற்ற போட்டியில் வட மாகாணத்திலிருந்து மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை மாத்திரமே இந்த சிறப்பு விருதினை வென்றுள்ளமை குறிப்பிட்டதக்கது.

இலங்கைக்கான பிரதிநிதி டாக்டர் அலோகா சிங்கா , சுகாதார அமைச்சின் செயலாளர் டாக்டர் பாலித மஹிபால மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஆகியோர் கலந்து கொண்ட இந்நிகழ்வில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் அஸாத் எம் ஹனிபா அவர்கள் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கான இந்த விருதுகளை பெற்றுக்கொண்டார்.

# ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து கல்முனையில் துண்டுப்பிரசுரம் பகிர்வு









( பாறுக் ஷிஹான்)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து கல்முனை மா நகரில் பிரச்சார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டது.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பேராசிரியர் முருகேசு ராஜேஸ்வரன் தலைமையில் குறித்த நடவடிக்கை சனிக்கிழமை(7) இடம்பெற்றது.

இதன் போது நற்பிட்டிமுனை ,பாண்டிருப்பு சந்திகள், கல்முனை சந்தை நகர வர்த்தக நிலையங்களுக்கு சென்ற தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பேராசிரியர் முருகேசு ராஜேஸ்வரன் ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவினை வழங்குமாறு பொதுமக்கள் வர்த்தகர்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.

இதே வேளை குறித்த நடவடிக்கை நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய இணைப்பாளர்; அப்துல் அஸீஸ்

(பாறுக் ஷிஹான்)

தேர்தல் காலத்தின் போது, தேர்தல் சட்டங்கள், நாட்டின் ஏனைய சட்டங்கள், நாட்டின் அரசியல் அமைப்பிற்கு இணங்க அந்தத் தேர்தல் நடாத்தப்படுவதனை உறுதி செய்வதற்கு அரச உத்தியோகத்தர்கள் கடமைப்பட்டுள்ளனர். இது ஒவ்வொரு விடயத்திற்குப் பொறுப்பான அரச உத்தியோகத்தர்கள் அந்தச்சட்டங்களுக்கமைவாக தங்களது கடமைகளை நியாயமானதாகவும் பக்கச்சார்பின்றியும் செய்வதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

1978ம் ஆண்டின் அரசியல் அமைப்பு யாப்பின்படி, மக்களுக்கு வாக்களிக்கும் உரிமை, சுதந்திரமாக அரசியலில் ஈடுபடும் உரிமை, சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலுக்கான உரிமைகளுடன் சட்டத்திற்கு முன் யாவரும் சமம் என்பதையும் உறுதிப் படுத்தியுள்ளது.

ஒவ்வொரு அரச உத்தியோகத்தர்களும் அரசியல் அமைப்பிற்கு அமைவாக செயற்படுவதற்கு உறுதிமொழி செய்துள்ளனர். அரச உத்தியோகத்தர்கள் கொண்டுள்ள சட்ட ரீதியான கடமைகளையும், பொறுப்புக்களையும் தவறாகப் பயன்படுத்துதல் அல்லது நடவடிக்கை மேற்கொள்ளாமல் விடல் பக்கச்சார்பாக செயற்படல் அரசியல் அமைப்பு யாப்பின் அடிப்படை உரிமையினை மீறும் செயலாகும்.



அவ்வாறு மீறுகின்ற சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு எதிராக 1996ம் ஆண்டின் 21ம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு புலனாய்வுகள் மற்றும் விசாரணைகளை நடாத்துவதற்கு மற்றும் அவர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

இந்த அடிப்படையில் எமது பிராந்தியத்தில் தேர்தல் நடைபெறுவதற்கு முன், தேர்தல் தினத்தன்று அல்லது தேர்தலின் பின்னர் அரச, நிருவாக, நிறைவேற்றுத்துறையினர் அடிப்படை உரிமையை மீறியதற்கான அல்லது மீறப்படுவதற்கான ஏதுக்கள் இருக்குமாக இருந்தால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை அலுவலகத்திற்கு முறைப்பாடு செய்ய முடியும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸ் தெரிவித்தார்.

# அபிவிருத்திகளை விடவும் உரிமைகளை பெறுவது முக்கியம்



**(ஹஸ்பர் ஏ.எச்)**

தமிழ் மக்களுடைய தனி நபர் விவசாய காணிகள் பங்குபோடப்பட்டு கொண்டிருக்கின்றது எனவும் தொல்பொருள் திணைக்களம் ,வன இலாக்கா போன்றனவும் அபகரிப்பு செய்துள்ளது என இலங்கை தமிழரசு கட்சியின் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் தெரிவித்தார்.

மூதூர் பட்டித் திடலில் (08) மாலை இடம் பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில் அபிவிருத்திகளை விடவும் உரிமைகளை பெறுவதே முக்கியமாக காணப்படுகிறது தமிழ் மக்களுடைய காணிகளை அடாத்தாக வனஜீவராசிகள் திணைக்களம், தொல்பொருள் திணைக்களம், துறை முக அதிகார சபை என மொத்தமாக 41 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாய காணிகளை கபளீகரம் செய்துள்ளனர் எல்லைநிர்ணய ஆணைக்குழு சில பகுதிகளை வேறு பகுதிகளுடன் சேர்த்துள்ளனர் குச்சவெளியில் 31 விகாரைகள் கட்டுகின்றனர் இதற்காக 2000 ஏக்கருக்கும் மேற்பட்ட காணிகள் வழங்கப்பட்டுள்ளன இவ்வாறாக தனிநபர் காணிகளை பங்கு போட்டுக் கொண்டிருக்கிறார்கள் இதனை மீட்க அனைவரும் ஒற்றுமையாக செயற்பட வேண்டும்.

அபிவிருத்திகளுக்காக அரசோடு இணைய வேண்டும் அதை விடவும் உரிமைகளை பெற முயற்சிப்போம். நாடாளுமன்ற உறுப்பினராகி ஏழு கிழமையாகிறது அதற்குள் ஐந்து கோடி ரூபா செலவில் பல அபிவிருத்திகளை செய்துள்ளேன் .கடல் தொழில் பிரச்சினைகளை தீர்க்க 13 இலட்சம் ஒதுக்கியுள்ளேன் இது போன்று உரிமைகளை விட்டுக் கொடுக்காது அபிவிருத்திகளை செய்வேன் .திரியாயில் விகாரைக்காக 3000 க்கும் மேற்பட்ட காணிகளை கபளீகரம் செய்யவுள்ளனர் இதனை தடுத்து வருங்காலத்தில் ஒன்றாய் செயற்படுவோம் என்றார்.

# தலவாக்கலை ஸ்ரீ கதிரேசன் ஆலயத்தில் விநாயகர் சதுர்த்தி





**(தலவாக்கலை பி.கேதீஸ்)**

விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு (7) தலவாக்கலை அருள்மிகு ஸ்ரீ கதிரேசன் ஆலயத்தில் சிவஸ்ரீ மு.வாமதேவ பிரசாந்த் குருக்கள் தலைமையில் விசேட பூஜை வழிபாடுகள் நடைபெற்றன. இதன்போது ஏராளமான பக்தர்கள் கலந்துக்கொண்டு விநாயகரின் அருளைப் பெற்றனர்.

# ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு பாடம் புகட்டுவோம்

**தலவாக்கலை பி.கேதீஸ்**



எதிர்வரும் 21 ம் திகதி தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு பாடம் புகட்டுவோம் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவர் பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

தலவாக்கலை நகரில் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரித்து நேற்று (8) நடைப்பெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரச்சார கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

எதிர்வரும் 21 ம் திகதி நாட்டின் தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் நடைபெறயிருக்கின்றது. சஜித் பிரேமதாச,ரணில் விக்கிரமசிங்க, அனுரகுமார திஸாநாயக்க ஆகிய மூன்று பேரில் நாம் சஜித் பிரேமதாசவையே தேர்ந்தெடுக்க வேண்டும். ஏனென்றால் சஜித் பிரேமதாச மிகவும் நேர்மையான மனிதர். மக்களின் கஸ்டங்களை நன்கு உணர்ந்தவர். அவரே கொடுக்கின்ற வாக்குறுதிகளை நிறைவேற்றும் தலைவர். நாங்கள் 48 அம்ச கோரிக்கைகளை அவரிடம் முன்வைத்துள்ளோம்.கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் நானும் மனோகணேசன், இராதாகிருஸண்ன் ஆகியோர் அமைச்சர்களாக இருந்து மக்களுக்கு பல்வேறு அபிவிருத்திகளை செய்து கொடுத்தோம். பல உரிமைகளை பெற்றுக் கொடுத்தோம். நான்கரை வருடத்தில் எங்களுடைய ஆட்சி முடிந்துபோனபின்பு 5வருடங்கள் எதிர்கட்சியிலேயே இருக்கின்றோம்.இன்னும் 10 நாட்களில் சஜித் பிரேமதாசவின் வெற்றி உறுதிசெய்யப்பட்டுள்ளது. அவருடைய அரசாங்கத்தில் நாங்கள் மூன்று பேரும் அமைச்சர்களாகி மலையக மக்களுக்கு அபிவிருத்திகளையும் உரிமைகளையும் பெற்றுக்கொடுப்போம்.நான் சாதாரண தோட்ட தொழிலாளியின் பிள்ளை அதனால்தான் அமைச்சு பதவியை எடுத்து மக்களுக்கு நேர்மையாக வேலை செய்ய கிடைத்தது.இந்திய அரசாங்கம் 10 ஆயிரம் வீடமைப்பு திட்டத்தை அமைக்க நிதியுதவி வழங்கியுள்ளது. ஆனால் இது வரை ஒரு வீடு கூட எங்கும் கட்டப்படவில்லை.சஜித் பிரேமதாச ஜனாதிபதியானதும் இந்த 10 ஆயிரம் வீடுகளை 3 வருடங்களில் நிர்மாணித்து கொடுப்பேன். அதற்கான அனுபவம் என்னிடம் இருக்கின்றது. மக்கள் யாரும் பயப்பட வேண்டாம்.பெருந்தோட்ட தொழிலாளர்களை சிறுதோட்ட உரிமையாளர்களாக சஜித் பிரேமதாச நிச்சயமாக மாற்றுவார். வீடுகளை கட்ட காணிகளை அவர் வழங்குவார். அந்த நாள் மிக விரைவில் வரும். தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க லயன்களை கிராமமாக மாற்ற போகின்றேன் என்கிறார். எங்களுக்கு நீங்கள் லயன்களை கிராமமாக மாற்ற தேவையில்லை. எங்களுக்கு லயனே தேவையில்லை. நான் கூறுகின்றேன் இந்த தேர்தலிலே நுவரெலியா மாவட்டத்தில் 2 இலட்சத்துக்கும் அதிகமான வாக்குகளை சஜித் பிரேமதாச பெறுவார். இன்றைய கூட்டத்திலேயே 25 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் கலந்துக்கொண்டிருக்கின்றார்கள். எனவே மக்களே எதிர்வரும் 21 ம் திகதி டெலிபோன் சின்னத்திற்கு வாக்களித்து சஜித் பிரேமதாசவை வெற்றி பெற செய்து இந்நாட்டின் ஜனாதிபதியாக்குங்கள் என்றார்.

# 2ம் உலக இந்து மாநாட்டை நடாத்தி இந்துக்களுக்கு பெருமை சேர்த்த ரணிலுக்கே இந்துக்களின் ஆதரவு

## சர்வதேச இந்து மத பீடம்

2ம் உலக இந்து மாநாட்டை தலைமை தாங்கி நடாத்தி இந்துக்களுக்கு பெருமை சேர்த்த ரணிலுக்கே இந்து மக்களின் ஆதரவு என சர்வதேச இந்து மத பீட செயலாளர் கலாநிதி சிவ ஸ்ரீ ராமசந்திர குருக்ள் பாபுசர்மா தெரிவித்துள்ளார்.

இலங்கை நாட்டின் முன்னாள் இந்து கலாச்சார அமைச்சராக இருந்த அமரர் தீ மகேஸ்வரன் காலத்தில் இரண்டாம் உலக இந்து மாநாடு உலக மக்கள் வியக்கும் வண்ணம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. அந்த மாநாட்டின் போது பண்டாரநாயக்க மண்டபத்தில் இப்போதைய ஜனாதிபதியும் அப்போதைய பிரதமரமாக இருந்த ரணில் விக்கிரமசிங்க தலைமை தாங்கி அங்குரார்பன நிகழ்வை ஆரம்பித்து வைத்திருந்தார்.

அதன் பொழுது அந்தண பெருமக்கள் புடை சூழ வேத மந்திரம் முளங்க மங்கள வாத்தியங்களுடன் வரவேற்கப்பட்டு அந்த நிகழ்வில் கலந்து கொண்டு இந்து மாநாட்டை சிறப்பித்து இருந்ததை ஒருபோதும் இந்து மக்கள் மறக்க மாட்டார்கள். அதேபோல யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் சந்திரிகா பண்டர் நாயக்க காலத்தில் பிரதமராக ரணில் விக்ரமசிங்க இருந்த வேளையில் இலங்கை அரசுக்கும்



விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதான உடன்படிக்கையை ஏற்பாடு செய்து யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்தி வன்முறையற்ற அமைதியான முறையில் தீர்வை பெறுவதற்கு முயற்சி செய்தவர் என்பதையும் தமிழ் மக்கள் ஒருபொழுதும் மறக்க மாட்டார்கள்.

அதேபோல நாடு பொருளாதார ரீதியில் முடங்கியிருந்த வேளை எரிபொருளுக்கும் எரிவாயுவிற்கும் மக்கள் நீண்ட வரிசைகளில் நின்றபோது இக்கட்டான சூழ்நிலையில் நாடு ஜனநாயகத்தை இழந்து கொண்டிருக்கின்ற வேளையில் துணிந்து பிரதமராக பதவியேற்று மக்கள் பாராளுமன்றத்தின் மூலம் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டு தனது துணிச்சலான நடவடிக்கைகளின் மூலமும் தீர்க்கதரிசனமான சிந்தனைகளின் மூலமும் பொருளாதாரப் பிரச்சினைக்கு ஓரளவு சுமூகமான தீர்வை கண்டு இன்று வரிசை இல்லாமல் செய்து மக்களின் பட்டினியை போக்குவதற்கு அசுவெசும திட்டத்தை கொண்டு வந்து மக்களுக்கு உரிய கொடுப்பனவை மானிய முறையில் உதவி செய்திருந்தார்.

இன்று நாடு முழுவதும் பசி பட்டினியின்றி ஓரளவுக்கு பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கு வழியை திறந்து விட்ட பெருந்தலைவர் ரணில் விக்கிரமசிங்க அவர்கள். அவருக்கு இந்துக்களாகிய நாங்கள் நிச்சயம் முழு மனதுடன் ஆதரவு கொடுப்பதோடு வடகிழக்கிற்கு நல்லதொரு தீர்வையும் தருவார் என்ற நம்பிக்கையோடு ஆதரவை வழங்குவோம்.

மேலும் இந்து மக்களையும் பெருமைப்படுத்திய ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கு இந்து மக்களின் ஆதரவு என முன்னாள் ஜனாதிபதியின் இந்து மத விவகார இணைப்பாளரும் சர்வதேச இந்துமத பீட செயலாளருமான கலாநிதி சிவ ஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா தெரிவித்துள்ளார்.

# மட்டக்களப்பு சிவில் சமூக செயற்பாட்டாளர் மீது வாழைச்சேனை பொலிசார் அச்சுறுத்தல்

**க.ருத்திரன்.**

மட்டக்களப்பு சிவில் சமூக செயற்பாட்டாளர் குருசுமுத்து வி.லவக்குமார் (சனிக்கிழமை) இரவு வாழைச்சேனை பொலிசாரின் அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்பட்டுள்ளதாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார்.

இன்று வாழைச்சேனை கிழக்கு ஊடக மன்றத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு அவர் இவ்வாறு தமது கருத்தினை தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது நேற்று இரவு 10.05 மணிக்கு முற்சக்கர வண்டியில் 2 பொலிசார் உட்பட ஊர்காவல் படை வீரர் ஒருவரும் தமது வீட்டிற்கு வருகை வந்து கதவில் தட்டி தூக்கத்தில் இருந்தவர்களை எழுப்பி முரண்பாடான பேச்சு வார்த்தையில் ஈடுபட்டுள்ளதாக கூறுகின்றார். தான் தனது மனைவிற்கு அடிப்பதாக தெரிவித்து அவரது மனைவி 119




பொலிஸ் அவசரப்பிரிவில் அழைப்பு விடுத்துள்ளதாகவும் அது தொடர்பாக விசாரிப்பதற்கு வந்துள்ளதாகவும் பொலிசார் கூறியுள்ளனர்.

தனது மனைவி இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளதகவும் நீ சண்டித்தனம் காட்டாதே.சண்டித்தனம் கதைக்காதே எனக் கூறி எச்சரிக்கை விடுத்துள்ளதாக கூறுகின்றார்.அவரது மனைவியோ இவ்வாறதொரு சம்பவம் எனக்கு ஏற்படவில்லை. எனது கணவர் எனக்கு அடிக்கவில்லை. எனது கணவர் பல்வேறு சிவில் சமூக செயற்பாட்டு வேலைத்திட்டங்களில் ஈடுபட்டு வருகின்றார்.வாழைச்சேனை பகுதி பொலிசார் எனது கணவரை ஏதோ வகையில் பழிவாங்குவதற்காக எனது பெயரை பயன்படுத்தி பொய்யான முறைப்பாட்டில் இரவு வீட்டிற்கு வந்து அச்சுத்தல் விடுத்தனர் என்றார்.

இதேவேளை ஜனாதிபதி வடக்கு கிழக்கிற்கு செல்கின்றாரோ அங்கெல்லாம் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள்,வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவகள் மற்றும் சிவில் சமூக உணர்வாலர்கள் எல்லாம் பாதுகாப்பு தரப்பினரினால் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

நேற்று வவுனியாவில சிவில் சமூக செயற்பாட்டாளர் ஒருவருக்கு இவ்வாறான சம்பவத்துடன் தொடர்பான தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. கடந்த மாதம் செங்கலடிக்கு ஜனாதிபதி வந்த வேளை மாதவனை மயிலத்தமடு பண்ணையாளர்களின் மேச்சல் தரை விவகாரம் தொடர்பாக இடம்பெற்ற நியாயமான நீதி வேண்டிய கவனயீர்ப்பு போராட்டத்தில் பங்கு கொண்டமைக்காக ஏறாவூர் பொலிசாடரினால் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு வழக்கு நடபெற்றுக்கொண்டிருப்பதாக கூறினார்.

இன்றைய தினம் ஜனாதிபதி தமது வீட்டிற்கு அருகில் உள்ள கிரான் கோரகல்லிமடுவிற்கு தேர்தல் பிரச்சாரகூட்ட நிகழ்வில் பங்கு கொள்ள வருகைதரவுள்ளதால் பொலிசாரின் இவ்வாறனதொரு பொய் குற்றச்சாட்டை கூறி என்னை மிரட்டலுக்கு உள்ளாக்குவதாகவும் இதற்கு வாழைச்சேனை பொலிசாரும் பொலிஸ் பொறுப்பதிகாரியும் உடந்தையாகவுள்ளதாக தெரிவித்தார்.

## இலத்திரனியல் ஊடாக ஆவணப்படுத்தல்

# முன்னோட்டம் வெளியீடு

**பாறுக் ஷிஹான்**

செட்டியூர் சிந்தனைச் செல்வன் கவிஞர் மயில்வாகனம் அதிபர் அவர்களின் 86 ஆவது ஜனன தினத்தினை முன்னிட்டு கவிஞர் மயில்வாகனம் கலைப் பணி மன்றத்தினால் ‘கவிஞரின் வாழ்க்கை பயணத்தை’ அடிப்படையாகக் கொண்டு அவரோடு வாழ்ந்தவர்கள் மற்றும் அவரது கலை பாசறையில் விளைந்த முத்துக்களின் கனதியான வார்த்தை பெறுமதியினால் கவிஞரின் படைப்புலகம் நிஜக் கண்முன்னே பிரமித்து நிற்கின்றது.

இவ் வெளியீட்டு நிகழ்வை கடந்த வியாழக்கிழமை (5) அன்று ஙீஊணடூடிணனு ஊடாக கவிஞர் மயில்வாகனம் கலைப் பணி மன்றத்தின் தலைவரும், கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளருமாகிய திரு.எம் கோபாலரத்தினம் அவர்கள் வெளியிட்டு வைத்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள செட்டிபாளையத்தில் சிந்தனைச் செல்வன் என்ற புனைபெயர் கொண்ட கவிஞர் க. மயில்வாகனம் ஆவார். அவர் கவிதையோடு மட்டுமன்றி நாடகம், நாட்டுக் கூத்து, நாட்டிய நாடகம், வசந்தன், கும்மி, கோலாட்டம் போன்ற கலைகளில் வல்லவராக திகழ்ந்தார்.

மட்/செட்டிபாளையம் பாடசாலையில் அவர் பணிபுரிந்த காலம் (1971-1983) சிறப்பானதாகும்.இவரது படைப்புக்கள் கவிதை, பாடல், நாடக இயக்கம், நாட்டுக்கூத்து என விரிந்தவெளி கொண்டவை. மாணவர் மன்றங்கள், வாணி விழா நிகழ்வுகள், பாடசாலைகளுக்கிடையேயான போட்டி நிகழ்வுகள் போன்றவற்றில் அவரது பங்களிப்பு அளப்பரியது.

கவிஞரின் வீடு கலைக்கூடமாகவே காணப்படும். இவ்வாறாக கலைப்பணியோடு நின்றுவிடாது சமூகத்தை நேசிக்கும் நல்மனிதராக அவர் வாழ்ந்தார்.

நல்ல பல சமூகபணிகளை இவ் வூருக்கு செய்து, மக்களோடு மக்களாக எளிமையான வாழ்க்கை வாழ்ந்து, மக்கள் பிரச்சினைகளை தனது பிரச்சினையாக முன்னிலைப்படுத்தி ஊர்போற்ற வாழ்ந்த செட்டியூர் சிந்தனைச் செல்வன் மயில்வாகனம் அவர்களின் 86 ஆவது பிறந்த தினம் அண்மையில் அனுஷ்டிக்கப்பட்டது.

# உலக சிலம்பம் போட்டியில் இலங்கை மாணவிகள் மூவர் பங்கேற்பு

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

மாஸ்டர் தயா பெரேரா மற்றும் மாஸ்டர் சிவராஜா ஆகிய இருவரின் தலைமையில் நடைபெறும் சோடோக்கான் கராத்தே பயிற்சி வகுப்பில் பயிற்சி பெற்று வரும் கண்டி, தெல்தோட்டை மலைமகள் இந்து கல்லூரியின் பழைய மாணவியான செல்வி எம். இந்துஷா மற்றும் அக் கல்லூரியில் கல்வி பயிலும் ஐ.சௌஜன்யா மற்றும் கண்டி, கலஹா ராமகிருஷ்ணா மத்திய கல்லூரியின் பழைய மாணவி பிரியங்கா கல்யாணி ஆகிய மூன்று மாணவிகளும் இந்தியாவில் கேரளாவில் நடக்கவிருக்கும் உலக சிலம்பம் போட்டியில் ஸ்ரீ லங்கா சிலம்பம் சம்மேலனத்தின் தலைவர் மாஸ்டர் திருச்செல்வம் மற்றும் செயலாளரானா மாஸ்டர் தினேஷ் மாஸ்டர் சிவராஜா அவர்களின் தலைமையில் மேல் குறிப்பிட்ட மூன்று மாணவர்களும் பங்குபெரும் வாய்ப்பை பெற்றுள்ளனர்.




# கொட்டகலையில் விநாயகர் சதுர்த்தி











கொட்டகலை நகரில் நேற்று ஞாயிற்றுக்கிழமை விநாயகர் சதுர்த்தி விழா சிறப்பாக இடம்பெற்றது.

நேற்று மதியம் 12 மணிக்கு கொட்டகலை ஹரங்டன் தோட்டத்தில் இருந்து விநாயகர் சிலை பெருமளவு பக்தர்களுடன் கொட்டகலை பிரதேச சபை முற்றத்திற்கு ஊர்வலமாக கொண்டு வரப்பட்டு

அங்கிருந்து கொட்டகலை நகரை அண்டிய பகுதிகளில் உள்ள அனைத்து தோட்டங்களில் இருந்து தனி தனியாக அந்த அந்த தோட்ட மக்களால் விநாயகர் சிலைகள் கொட்டகலை பிரதேச சபை முற்றத்திற்கு ஊர்வலமாக கொண்டு வரபட்டன.

இதனைத்து தொடர்ந்து அங்கு இருந்து கொட்டகலை நகர்வழியாக அனைத்து விநாயகர் சிலைகளும் ஊர்வலமாக நுவரெலியா ஹட்டன் பிரதான வீதியில் உள்ளது கொமர்சல் பகுதியில் உள்ள நீர் தடாகத்திற்கு சுமார் மூன்று ஆயிரம் பக்தர்கள் புடைசூழ எடுத்து வரப்பட்டு தடாகத்தில் கரைக்கப்பட்டது.

அட்டன் எஸ்.ரி.ரஜினி

# ஜனாதிபதித் தேர்தல் 2024



மில்லியன் கணக்கில் வாக்குகளை
பெற்று வெற்றிபெற
மில்லியன் கணக்கில்
வாக்காளர், பார்வையாளர்களைக்
கொண்ட சுபீட்சம் ஊடகத்தில்
குறைந்த விலையில்
விளம்பரங்களை வெளியிடுங்கள்

077 664 5232 / 077 311 2601